20 JAN 2021

01859

<u>சுருக்கம்</u>

மீன்வளத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி ஜெ.அபிராமி, இளநிலை உதவியாளர் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியனவற்றை தளர்வு செய்து பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன்.2) துறை</u>

அரசாணை (3டி) எண்.2

நாள் 18.01.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
தை – 5

<u>படிக்கப்பட்டன:</u>

1. மீன்வளத்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.1417/எம்.5/2017, நாள் 28.11.2018, 26.02.2020 மற்றும் 18.02.2020.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 23.01.2020.

----

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மீன்துறை இயக்குநரின் கடிதத்தில், கடலூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஊர்தி ஒட்டுநராகப் பணிபுரிந்த ச.ஜெய்சங்கர் 21.05.2016 அன்று பணியிடை மரணமடைந்ததையடுத்து அவரது மனைவி திருமதி. ஜெ.வசந்தி கடலூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 10.01.2017 நாளிட்ட கருணை அடிப்படை பணி நியமன விண்ணப்பத்தில் தனது மனவளர்ச்சி குன்றிய மகனை பராமரிக்க வேண்டியிருப்பதால் தன்னால் எந்தப்பணிக்கும் செல்ல இயலாது என்பதால், தனது மூன்றாவது மகளான திருமதி. ஜெ.அபிராமிக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறு விண்ணபித்துள்ளார் என்றும் அவ்விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் அளிக்கப்பட்டுள்ளது என்றும் விண்ணப்ப நாளில் திருமதி. ஜெ. அபிராமியின் வயது 28 என்றும், அவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சிப்பெற்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் திருமதி. ஜெ. அபிராமி, கடலூர் (மண்டலம்) மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 28.09.2018–ல் பணி நியமனம் செய்யப்பட்டார் என்றும் அவர் பணியில் சேர்ந்த நாளான 28.09.2018 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மீன்துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, கருணை அடிப்படையில் கடலூர் (மண்டலம்) மீன்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.ஜெ.அபிராமி திருமணமானவர் என்பதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-இன் பிரிவு 58–இல் ஆளுநர் அவர்களுக்கு

Scanned with CamScanner

வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவுகள்-15 மற்றும் 28(2) ஆகியனவற்றை தனியர் சார்பாக தளர்வு செய்து, அவர் பணியில் சேர்ந்த நாளான 28.09.2018 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. திருமதி.ஜெ.அபிராமி, இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 28.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அ.சா.எண்.21619/க்யூ.1/2020-1, நாள் 30.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் அ.சா.எண்.96/G2/2021-1, நாள் 07.01.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மீன்துறை இயக்குநர், சென்னை-35.
திருமதி. ஜெ.அபிராமி, இளநிலை உதவியாளர்
(மீன்துறை இயக்குநர் மூலமாக)

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், ப(ம)நி.சீ) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

S. Thenil 18/1/2021
பிரிவு அலுவலர்

SEW
18/1/21

Scanned with CamScanner